

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஒன்றியம் மணியம்பட்டு பகுதி நேர நியாய விலைக் கடையை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் வாலாஜா ஒன்றியக் குழுத் தலைவர் சேஷாவெங்கட ரமணன் மற்றும் ஒன்றிய செயலாளர் பத்மநாபன், மணியம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் மோகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



12.03.2026 நிகழ்வுகள்

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

### 1. மீனவர்கள் கைது விவகாரத்தில் மெத்தனமாக இருக்கும் ஒன்றிய அரசு!

**திருச்சி சிவா**



கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு நாடுகளில் ஆண்டு வாரியாகவும் நாடு வாரியாகவும் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கை, மீனவர்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் குறித்து விவாதிக்க இந்திய மற்றும் இலங்கை பிரதிநிதிகளுக்கு இடையே மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழு நடத்திய கூட்டங்களின் விவரங்கள் மற்றும் மீனவர்கள் பாதுகாப்பாக நாட்டிற்கு அழைத்து வரப்படுவதை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்று திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 2. கச்சா எண்ணெய் உற்பத்திக்கு ஒன்றிய அரசின் திட்டங்கள் என்ன?

**டாக்டர் கலாநிதி வீராசாமி**



சுமார் பதினைந்து பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள எண்ணெய் வளங்களை இறக்குமதி செய்வதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு புர்கினா பாசோவுடன் இந்தியா ஏற்படுத்தியிருக்கும் ஒப்பந்தம் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அரசுகளுக்கிடையே முடிவான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) குறித்த விவரங்கள் என்ன? அந்த ஒப்பந்தத்தின் பொருளாதார நம்பகத்தன்மை, புவிசார் அரசியல் தாக்கங்கள் மற்றும் எரிசக்தி பாதுகாப்புகளை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? இந்தியாவின் கச்சா எண்ணெய் ஆதாரத்தை பன்முகப்படுத்தவும் நீண்ட கால எரிசக்தி விநியோகங்களைப் பாதுகாக்கவும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

### 3. ஈரோட்டில் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை என்ன?

**அந்தியூர் பி. செல்வராசு**



சத்தியமங்கலம், தாளவாடி மற்றும் ஹாசனூர் வழித்தடங்கள் உட்பட தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் மொபைல் நெட்வொர்க் திறன் குறித்து அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் பி செல்வராசு கேள்வி எழுப்பியுள்ளார். அதேபோல் ஈரோடு மாவட்டத்தில் அரசு கோபுர விரிவாக்கம், ஃபைபர் பேக்ஹால் வலுப்படுத்துதல், கவரேஜ் தணிக்கைகள், டிரைவ் சோதனைகள், சேவை குறைபாடு மற்றும் புகார் தீர்வுக்கான அபராதங்கள் போன்றவை குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? நம்பகமான மொபைல் கவரேஜ், மின்தடைகளின் போது விரைவான மறுசீரமைப்பு மற்றும் குறிப்பிட்ட மாவட்டத்தில் சேவை தரங்களை அமல்படுத்துவதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் என்ன? எனவும் அவர் கேட்டுள்ளார்.

### 4. கிராமப்புறங்களில் எப்போது கிடைக்கும் 5G மொபைல் சேவைகள்?

**எஸ்.ஆர்.சிவலிங்கம்**



2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஐந்தாம் தலைமுறை மொபைல் சேவைகளை நாடு தழுவிய அளவில் அறிமுகப்படுத்தும் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். தொலைபேசி மற்றும் பிராட்பேண்ட் சேவைகளை கிராமப்புறங்களிலும் விரிவாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அதிவேக நெட்வொர்க் பரப்பளவை உறுதி செய்வதற்காக அரசாங்கமும் தொலைத்தொடர்பு நிறுவனங்களும் நிறுவிய 5G அடிப்படை நிலையங்களின் எண்ணிக்கை?குறித்த விவரங்களையும் அவர் கேட்டுள்ளார்.

### 5. உயர்தர கனிமங்களுக்கான சந்தையை இந்தியா மேம்படுத்துகிறதா?

**ஆர். கிரிராஜன்**



முக்கியமான கனிமங்களுக்கான விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துதல் மற்றும் பன்முகப்படுத்துதல் குறித்து விவாதிக்க வாஷிங்டனில் நடைபெற்ற முக்கியமான கனிமங்கள் அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார். அரிய மண் கனிம விநியோகச் சங்கிலிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சுத்திகரிப்பு மற்றும் செயலாக்க தொழில்நுட்பங்கள், உயர்தர கனிமங்களுக்கான நீண்டகால சந்தை மற்றும் விநியோகங்களைப் பாதுகாப்பதற்கான நிலையான முறைகள் குறித்தும் புதிய திட்டங்களுக்கு போதுமான நிதியைப் பெறுவதற்கு, கழிவுகளிலிருந்து கனிமங்களை மறுசுழற்சி செய்வதற்கு, தொழில்நுட்பப் பகிர்வு மற்றும் கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளுக்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள்? குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

### 6. விமான பணியாளர் பற்றாக்குறையால் ஏற்படும் பாதுக்காப்பு குறைபாடுகளை களைவது எப்போது?

**ஈரோடு கே.இ.பிரகாஷ்**





சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தில் (DGCA) காலியாக உள்ள 50% அதிகமான பணியிடங்களை நிரப்பாமல் இருப்பது விமான போக்குவரத்து துறையில் விபத்துகளுக்கு வழிவகுக்கும் என போக்குவரத்து, சுற்றுலா மற்றும் பண்பாட்டிற்கான நாடாளுமன்ற நிலைக்குழுவால் வெளியிடப்பட்ட வெளிப்படையான எச்சரிக்கையை ஒன்றிய அரசு ஏன் பரிசீலிக்கவில்லை என திமுக ஈரோடு மக்களவை உறுப்பினர் பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார். பயனுள்ள பாதுகாப்பு ஒழுங்குமுறைக்கு அவசியமானது என்று குழுவால் அறிவிக்கப்பட்ட DGCA-வில் உள்ள அனைத்து முக்கியமான பதவிகளும் எந்த நிரப்பப்படும் காலக்கெடு என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 7. மேகதாது அணையை தடுக்குமா காவிரி மேலாண்மை ஆணையம்?

**தேனி தங்க தமிழ்செல்வன்**

**கோவை கணபதி ராஜ்குமார்**





காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ஜனவரி 6, 2026 அன்று டெல்லியில் 47வது முறையாக நடத்திய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டவை குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ் செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்கள். காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது குறித்து கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் அறிக்கை வெளியிடுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

### 8. போதுமான சமையல் எரிவாயுவை மக்களுக்கு வழங்குகிறதா ஒன்றிய அரசு?

**தருமபுரி ஆ. மணி**



கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மொத்த சமையல் எரிவாயு விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட வாரியாக உரிமம் பெற்ற விநியோக நிறுவனங்களின் எண்ணிக்கைகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார். தர்மபுரியில் முழுமையான சமையல் எரிவாயு சேவை செய்யப்படாத பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட பகுதிகள் மற்றும் அதை களைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

### 9. முத்ரா கடன்கள் பெறுவதை எளிதாக்குக!


**ஆரணி தரணிவேந்தன்**



பிரதான மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்த கடன்களின் எண்ணிக்கை குறித்து திமுக எம்.பி. தரணிவேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். PMMY கடன்களால் அதிகம் பயனடைந்த துறைகளின் விவரங்கள், இதில் கைவினைஞர் பிரிவுகள், சிறு வணிகர்கள் மற்றும் தமிழ்நாட்டில் சேவை வழங்குநர்கள் எண்ணிக்கை? பெண் தொழில்முனைவோர் மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கான கடன் எளிதாக கிடைக்கச் செய்வதை அதிகரிக்க ஏதேனும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? ஸ்டாண்ட்-அப் இந்தியா, முத்ரா பிளஸ் திட்டங்கள் மற்றும் மாநில MSME ஆதரவு திட்டங்கள் போன்ற பிற திட்டங்களுடன் PMMY ஐ ஒருங்கிணைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் என்ன? தகுதியான பயனாளிகளுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டில், கவரேஜை விரிவுபடுத்துதல், நடைமுறைகளை எளிதாக்குதல் மற்றும் கடன் வரம்புகளை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் என்ன? எனவும் அவர் கேட்டுள்ளார்.

### 10. குலசேகரப்பட்டினத்தில் விண்வெளித் திட்டப்பணிகளின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் இலக்கு என்ன?

**ராஜாத்தி சல்மா**



குலசேகரப்பட்டினத்தில் விண்வெளித் திட்டப்பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் உண்மையான செலவின விவரங்கள், டிசம்பர், 2026க்குள் முதல் ராக்கெட் ஏவுதலுக்கான திட்டங்கள், இரண்டாவது விண்வெளித் திட்டப்பணியின் மேலாண்மை மற்றும் செயல்பாடுகளில் பாலின சமத்துவத்துடன் தலைமை பொறுப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் வசதி முழுமையாக இயக்கப்பட்டவுடன் வருடாந்திர ஏவுதலின் எண்ணிக்கை என்ன என்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.

# கலைஞரின் கனவுகளுக்கு வடிவம் தரும் முதல்வர்!



தலைவர் கலைஞர் 2013-ல் நடந்த மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் நம்மிடமிருந்து ஒதுங்கி இருந்த காங்கிரஸ், எதிரில் இருந்த புதிய தமிழகம், மனிதநேய மக்கள் கட்சி, ஆகியவற்றிடம் உதவி பெற்று கனிமொழி கருணாநிதி அவர்களை வெற்றிபெறவைத்தார்.

நம்மிடம் 23 சட்டமன்ற உறுப்பினர்களும் தே.மு.தி.க. விடம் 29 உறுப்பினர்களும் இருந்த நேரம்.

2014-ல் நடந்த மேலவைத் தேர்தலில் கலைஞர் அவர்கள் தே.மு.தி.க.விற்கு மேலவை உறுப்பினர் ஒன்றை விட்டுத் தருவதாகச் சொல்லி அனுப்பி இருந்தார். அவர்களிடம் மறு தகவல் வராமல் காலம் தாழ்த்தியதால் கலைஞர் அவர்கள் தி.மு.க. வேட்பாளராக அண்ணன் திருச்சி சிவாவை அறிவித்தார்.

அறிவிப்புக்குப் பின் லட்சிய வேங்கை திருச்சி சிவா தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றார். நானும் உடன் சென்றேன். பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றவுடன் தலைவர் சொன்னார் “சிவா! உன் திறமைக்கு, தியாகத்துக்கு, தகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருக்கிறாய், ஆனால் தே.மு.தி.க. வந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய சூழல் வரும். நீ விட்டுத் தர வேண்டும். அது எதிர்கால 2016 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குத் தோழமையாக அமையும்” என்றார்.

அதற்கு சிவா அவர்கள், “அதுக்கு என்ன அண்ணா? அவர்கள் வந்தால் மகிழும் முதல் ஆள் நான் தான். கண்டிப்பாக வாபஸ் பெறுகிறேன், நீங்கள் சொன்ன பிறகு மறு பேச்சு ஏது” என்று தியாக மனதோடு கூறினார்.

ஏதோ ஒரு சூழல் நெருக்கடி அன்று அந்த உறவு ஏற்படாமல் தடைபட்டது. அன்று தே.மு.தி.க. ஏற்று இருந்தால் தொடர்ந்து தே.மு.தி.க. ஒவ்வொரு தேர்விலும் ஒரு உறுப்பினர் உருவாகி இருப்பார்கள் அ.தி.மு.க. என்ற ஒரு கட்சி இன்று இல்லாமல், காணாமல் போயிருக்கும். தமிழ்நாடு ஆரோக்கியம் பெற்று இருக்கும். தொடர்ந்து தி.மு.க.வே ஆட்சியில் தொடர்ந்து இருக்கும்.

2014-ல் கலைஞர் அவர்கள் கண்ட கனவை, உறவை, அதே எம்.பி. சீட்டை தே.மு.தி.க.விற்கு கொடுத்து 2026 கூட்டணிக்கு அஸ்திவாரம் போட்டு கலைஞரின் கனவை நிறைவேற்றி இருக்கிறார் இன்று தளபதி.

அதேபோல் 2008-ல் தேசிய அளவில் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் தோழமை ஓரிடத்தில் நிற்காது என பிரிந்த சூழலில், கலைஞர் அவர்கள் இரு அமைப் போடும் உறவாட விரும்பினார். காங்கிரஸ் இருந்ததால் கம்யூனிஸ்ட் தோழர்கள் தி.மு.க. விடம் இருந்து பிரிந்தார்கள். கலைஞர் மனம் வருந்தியது. இரண்டையும் தி.மு.க.வின் குடையின் கீழ் கொண்டுவர கலைஞர் கனவு கண்டார். அந்த கனவை 2019 தேர்தலில் கழக தலைவர் தளபதி அவர்கள் நிறைவேற்றினார்கள்.

1978 வாக்கில் கலைஞரையும், எம்.ஜி.ஆரையும், சேர்த்து வைக்க ஒரிசாவிலிருந்த அன்றைய ஒன்றிய அரசின் காபினெட் அமைச்சர் பிஜு பட்நாயக் தலைமையில் தி.மு.க.வையும், அ.தி.மு.க.வையும் இணைப்பது என்று முடிவு செய்தனர். கட்சியின் தலைவராக கலைஞரே தொடர்வது என்றும், முதல்வராக எம்.ஜி.ஆர் தொடர்வது என்றும், கட்சிப் பெயர் தி.மு.க. என்று முடிவு செய்ததாக சொல்லப்பட்டு, பிறகு அந்த செயல் தடைபட்டது. எப்படியோ ஒன்றுபட்ட தி.மு.க.வை உருவாக்க நினைத்த எம்.ஜி.ஆர். மற்றும் கலைஞரின் கனவு அன்று தடைப்பட்டது. கலைஞர் கண்ட அந்த கனவு 2026-ல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முயற்சியில் பெரும்பகுதி நிறைவேறி இருக்கிறது.

ஆட்சியில் மூன்று முறை முதல்வராக இருந்தவர். கட்சியில் ஒருங்கிணைப்பாளராக இருந்த ஓ.பி.எஸ். முதல் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்து கொண்டே இருக்கின்றனர். அ.தி.மு.க.வில் இப்போது உறுப்பினர் குறைவு.

தளபதியின் அடுத்த ஆட்சியில் 2026-2031 நிறைவுக்குள் எள் அளவு, எள்ளின் முனை அளவு, முனையின் மூக்களவு கூட அ.தி.மு.க.வில் உறுப்பினர்கள் இருக்க மாட்டார்கள்.

அ.தி.மு.க.வின் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவுப்படி தி.மு.க.விலேயே வந்து சேர்ந்து விடுவார்கள்.

2036 -லும் தி.மு.க.வே ஒன்றுபட்டு நிற்கும். வென்று காட்டி மகிழும்.

தி.மு.க.வில் கலைஞர் கண்ட கனவை, தளபதி நிறைவேற்றுகிறார். ஆனால் அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை ஜெயலலிதா கண்ட கனவு “நான் தவறு செய்து விட்டேன், தவறு செய்தமைக்கு மன்னிப்பு கேட்க தயங்க மாட்டேன், மன்னிப்பு கோருகிறேன், இனி என் காலத்துக்கு பின்னும் அ.தி.மு.க. எந்த காலத்திலும் பா.ஜ.க.வுடன் ஒட்டோ, உறவோ வைத்துக் கொள்ளாது” என்றார்.



கவிஞர்

**காசிமுத்து மாணிக்கம்**

(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

ஆனால் எடப்பாடி, ஜெ கனவை சிதைத்து ‘உறவல்ல, அடிமையாகவே மாறி’ அ.தி.மு.க. வை, அடிமை அ.தி.மு.க.வாக மாற்றிவிட்டார்.

“விசுவாசத்திற்கு மறு பெயர் ஓ.பி.எஸ். தான்” என கூறிய ஜெயலலிதா, தான் முதல்வராக முடியாத சூழலில், அ.தி.மு.க. வெற்றி பெற்றால் ஓ.பி.எஸ். தான் முதல்வர் என ஒருமுறைக்கு இருமுறை அடையாளம் காட்டினார். ஜெயலலிதா இல்லாத சூழலில் பன்னீரை முதல்வராக தொடர விடாமல் செய்வது, கனவு கண்ட ஜெயலலிதா அம்மையாருக்கு அசிங்கம் இல்லையா? கனவைச் சிதைக்கலாமா?

தி.மு.க.வை வசைபாடியவர்கள் இன்று, தி.மு.க.வின் புகழுக்கு இசை பாடுகிறார்கள். தி.மு.க.வின் திசைக்கு இசைவு தருகிறார்கள்.

மிட்டாய் கண்டு ஏமாற இருந்த குழந்தைகள் கூட, வேட்டி கட்டிய அன்னை ஸ்டாலின் மடியை கெட்டியாக பிடித்துக் கொண்டனர். தளபதியின் சொற்கண்டு சுவைத்தாருக்கு கற்கண்டும் கைக்கும், கை போகாது, தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும், கை போகாது. தி.மு.க.வை தவிர வேறு எவர் கைக்கும் என காங்கிரசார் கொண்டாடி மகிழ்கின்றனர்.

ஜெயலலிதாவின் கனவைச் சிதைத்து, அ.தி.மு.க.வை, தி.மு.க.வுடன் பகுதி பகுதியாக இணைக்க செயல்படுகிறார் பத்து தோல்வி பழனிசாமி.

தே.மு.தி.க., மக்கள் நீதி மையம், எஸ்.டி.பி.ஐ. என புதிய நண்பர்களைச் சேர்த்து தி.மு.க.வை பலமாக்க கலைஞர் கண்ட கனவை கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் அமைத்து தருகிறார்.



வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு தொகுதி சதுப்பேரி ஊராட்சியில் சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் படகு குழாம் மற்றும் சுற்றுலா மையத்தை தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு , மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன் மற்றும் அரசு துறை அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.